வழங்கியிருக்கிறார்கள். நிதியும் தந்து இருக்கிறார்கள். அரசும் ஆவன செய்திருக்கிறது. எனவே, இந்த ஆண்டு சூரியகாந்தி பயிரிடக்கூடிய பரப்பளவு அதிகமாகக் கூடியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 232, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

232--

அரசு சார்பில் "ரோபாட்" தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்

16394--திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் அரசு சார்பில் "ரோபாட்" தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யும் தொழிலே தெய்வம் என்ற உணர்வு உணர்வுபூர்வமாக தொழில் அதிபர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் மத்தியில் நிலைத்து நின்றிட ஆக்கபூர்வமான ஆலோசனைகளை, நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் ஏற்கெனவே நல்ல முறையில் நடந்து வரும் பெரிய தொழிற்சாலைகளில் ரோபாட் என்ற இயந்திர மனித தொழிலாளியை பரிட்சார்த்தமான முறையில் பயன்படுத்த அரசு உத்தேசிக்குமா? அப்படி இல்லையென்றால் தொழிற்சாலைகளில் தொழிலுக்கு ஏற்றவாறு வெளிநாடுகளிலிருந்து அந்த ரோபாட் என்ற இயந்திரத்தை பயன்படுத்துகின்ற வகையில் அரசு தருவித்து பயன்படுத்த ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அரசு நிறுவனங்களிலோ அல்லது அதன் கூட்டுத்துறை நிறுவனங்களிலோ, ரோபாட் என்று சொல்லப்படுகின்ற இயந்திர மனிதன் தயாரிக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் அந்தத் துறையைப் பொறுத்தமட்டில் ரோபாட் தயாரிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்றும், தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு மின்னணுவியல் கழகம்-எல்காட் அவர்களிடம் எந்தவிதமான செயற்குறிப்பும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். வேறு தனியார் நிறுவனங்கள் ஏதேனும் ரோபாட் தயாரிப்பில் ஈடுபட முன்வந்தால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் ரோபாட் என்ற அதி நவீன மனித இயந்திரத்தைப் பயன்படுத்தி தங்களுடைய உற்பத்தியை அதிகரிக்கிறார்கள். அதனால் பொருளாதாரம் மிக முன்னேறியிருக்கிறது. எனவே, மனிதன் உற்பத்தியில் ஈடுபடும்போது குறைந்தது 6 அல்லது 8 மணி நேரத்தில் சோர்வு அடைகின்ற நிலை ஏற்படுகிறது. ஆனால் இந்த இயந்திர மனிதன் அந்த சோர்வுக்கே இடம் இல்லாமல் அதிக அளவில் உற்பத்தி செய்கின்ற வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே, ரோபாட் தயாரித்து அதைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜப்பான், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று அதுவும் தன்னோடு ஒரு தொழில் நுட்பக் குழுவையும் அழைத்துச் சென்று அங்கே பார்வையிட்டு அந்த தொழில்நுட்பத்தை இங்கே செயற்படுத்தி தொழில் நுட்பத்தைப் பெருக்குவதற்கு எதிர்காலத்தில் ஏதாவது திட்டம் உண்டா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இயந்திரத்தைப் போல் வேலை செய்வதற்கு ஏராளமாக மனிதர்கள் இருப்பதால் இயந்திர மனிதனை தயார் செய்து அதை தொழிற்சாலைகளில் வைத்து தொழில் உற்பத்தியைப் பெருக்கவேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பி. பரமசிவம் அவர்கள் இதுபோன்ற இயந்திர மனிதன் தயாரிக்கும் திட்டத்திற்காக ஜப்பான் போன்ற வெளிநாடுகளுக்கு என்னை அனுப்புவதற்கு ஒரு ஆழ்ந்த ஆலோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். அவருடைய ஆலோசனைக்கும், ஆதரவுக்கும், பாசத்திற்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏற்கெனவே 1982 ஆம் ஆண்டில் ஜப்பான் எல்லாம் சென்று வந்திருக்கிறேன்.

ஆகவே, இதுபோன்ற இயந்திர மனிதனைத் தயாரிப்பதற்கு ஜப்பான் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய நாட்டில் இருக்கிற நம்முடைய மூளையைப் பயன்படுத்தியே இதைத் தயார் செய்யலாம். ஆனால் தேவையிருக்குமா என்பதைப் பார்த்துத் தான் அது குறித்து அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரோபாட் மனிதன் என்பது டேன்ஜரஸ் இண்டஸ்ட்ரீஸ் என்று கருதப்படுகின்ற தொழிற்சாலைகளில் மனிதன் அங்கே வேலை செய்தால் பாதுகாப்பு இன்மை ஏற்படக் கூடிய சூழ்நிலையிலே அணுவால் மின்சாரம் தயாரிக்கும் தொழிற்சாலைகளிலும்-இப்போது சிவகாசியைப் பொறுத்தமட்டில் பட்டாசு தொழிற்சாலைகளில் வெடி விபத்து ஏற்படுகின்ற ஒரு காரணத்தால் அங்கே இந்த ரோபாட் மனிதனை வைத்து பட்டாசு தயாரிக்கவும்...(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர்கள் கேள்வி நேரத்தில் தங்களுடைய இருக்கையில் இருந்து வேறு ஒரு இருக்கைக்குச் செல்லக் கூடாது.

முற்பகல் 10-40

திரு. ஜெ. பாலகங்காதரன்: மற்றும் மிகச் சிறிய நுணுக்கமான வேலைகளைச் செய்வதற்கு இந்த ரோபாட், மிக அதிக முன்னேற்றம் அடைந்த நவீன நாடுகளான, ஜப்பான், ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளிலே இன்றையதினம் பயன்படுத்தப்படுவதைப் பார்க்கும்போது, அதை இந்தியாவிலே கொண்டு வருவதற்கு, தானைத் தலைவி, புரட்சித் தலைவி ஆட்சிதான் இன்றையதினம் தொழில் துறையிலே மிக முன்னோடியாக இருக்கின்ற காரணத்தினால் அந்த மாதிரி ரோபாட்டுகளை எல்காட் உதவியுடன் தமிழகத்திலே செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளுக்குச் செல்லும்போது எங்களைப்போன்ற தொழில் ஆர்வம் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துக்கொண்டு செல்வாரா? அதை இங்கே செயல்படுத்த முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகங்காதரன் அவர்களை தேர்ந்தெடுத்திருக்கிற தொகுதியே ஜப்பானைப்போன்ற ஒரு தொழில் நகரம்தான். ஆகவே, திரு. பாலகங்காதரன் அவர்கள் ஜப்பானுக்குச் சென்று இதுபோன்று அரிய நுணுக்கங்களையெல்லாம் தெரிந்துகொள்ள

வேண்டிய அவசியம் இப்போது இல்லை. கேட்டிருக்கிற கேள்வி, ரோபாட் தயாரிக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று கேட்டு இருக்கிறார்கள். அப்படி ஒரு திட்டமே இல்லை என்று நான் பதில் தெரிவித்து இருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்விக்கு இப்போது இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 233, திரு ஏ. ரவிக்குமார், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

233--

பொன்னேரியில் ஆற்றில் அனுமதியின்றி மணல் எடுப்போர் மீது நடவடிக்கை

***16573--திரு. ஏ. ரவிக்குமார்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பொன்னேரியில் ஆற்றில் அனுமதி பெறாமல் மணல் எடுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்,

(ஆ) அனுமதியின்றி முறைகேடாக மணல் எடுப்பதைத் தடுக்க சைதாபேட்டை சார் ஆட்சியர், பொன்னேரி வட்டாட்சியர், சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் விழிப்புடனும் முனைப்புடனும் செயல்பட அறிவுரைகள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், அவ்வப்போது திடீர் தணிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய தணிக்கைகள் மூலம் அனுமதியின்றி முறைகேடாக மணல் எடுப்பதை அறவே தவிர்க்க முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதியிலுள்ள சின்னகாவனம், பெரும்பேடு, சீமாவரம், பள்ளிபுரம், ஜெகன்னாதபுரம், ஆத்தூர், எருமைவெட்டிபாளையம், புதுக்குப்பம், பூதூர், வடக்குநல்லூர் போன்ற